## வாரத்தில் ஓர் முத்து!

09 பெப்ரவரி 2010 — சகரியா பூணன்

# 41. இயேசு நடந்த பாதை!

ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலம்வரை பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது! அவையாவன:

1) தாவீது பெற்றதைப்போல பாவமன்னிப்பு பெறுவது (சங்கீதம் 103:3)

2) ஆபிரகாமைப்போல விசுவாசத்தில் நீதிமானாக்கப்படுவது (ஆதி. 15:6, ரோமர் 4:2,3).

3) சகரியாவையும் எலிசபெத்தையும்போல, ஜீவியத்தின் வெளிப்புறமான நீதியை அடைவது (லூக்கா 1:6).

4) கிதியோனையும் எலிசாவையும் போல தேவனை சேவிப்பதற்காக அபிஷேகத்தைப் பெறுவது (நியாயாதிபதிகள் 6:34; 2இராஜாக்கள் 2:9-15).

ஆனால், மகாபரிசுத்தஸ்தலத்தின் திரைக்கு வந்தபோதோ...... அதைக்கடந்து அவர்களால் செல்லமுடியவில்லை! இதைத்தான் எபிரெயர் 10:19,20 வசனங்கள், "ஆகையால் சகோதரரே, நாம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின் வழியாய் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியம் உன்டாயிருக்கிறது" என மிகுந்த மகிழ்ச்சியுடன் பறைசாற்றி முழங்குகிறது. இந்த வசனம் எடுத்துக்கூறும் திரையானது "**இயேசுவின் மாம்சமாகிய திரை**" என்பது இந்த வசனத்தில் தெளிவாய் இருக்கிறது. ஆசாரிப்புக் கூடாரத்தின் மாதிரியின்படி கட்டப்பட்ட எருசலேம் ஆலயத்திலும், பரிசுத்த ஸ்தலத்திற்கு அடுத்திருந்த மகா பரிசுத்த ஸ்தலத்தையும் இந்த திரையானது மூடியிருந்தது. ஆம், கிறிஸ்து கல்வாரி சிலுவையில் மரித்த போது.....! ஆ, என்ன ஆச்சரியம்! இந்த திரையானது மேலிருந்து கீழாக இரண்டாக கிழிந்தது!! (மத்.27:50,51). இச்சம்பவம், இயேசு தன் மாம்சத்தில் நிறைவேற்றி முடித்த கிரியையை நமக்குத் தெரியப்படுத்துகிறது. இதுவே தேவபக்தியான வாழ்க்கை வாழ்வதற்குரிய இரகசியமென 1 தீமோத்தேயு 3:16 கூறுகிறது. அதாவது கிறிஸ்து நம்மைப்போன்ற மாம்சத்தில் (திரையுடன்) வந்தபோதிலும் தன்னுடைய ஆவியை கறைபடாமல் தூய்மையாகக் காத்துக்கொண்டார், என அறிந்துகொள்வதே அந்த இரகசிய மாகும்! ஏனெனில், இவ்வாறாகத்தான் (இந்த மாம்சமாகியதிரையின் வழயாகத்தான்) மகா பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லும் வழி நமக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இயேசு தன்னுடைய இப்பூலோக வாழ்க்கையில் மாம்சத்தை தொடர்ச்சியாய் சிலுவையில் அறைந்தே ஜீவித்தார். இவ்வாறாகவே அவர் திரையை கிழித்தார்! அதன் மூலம் தன் ஆவியைத் தூய்மையாய் காத்துக்கொண்டார்!!

இப்போது நாமும் "நம்முடைய மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும்" சிலுவையில் அறைந்து அவர் நடந்த அதேவழியில் நடந்திட முடியும் (கலாத்தியர் 5:24).

தமிழ் வடிவம் : T. ரத்தினகுமார்

© Zac Poonen ( 2009 )